HHR17-1-1-TA

# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு சுமார் பாதி கிறிஸ்தவர்கள் தங்கள் நாட்களுக்குள்ளாக இயேசு இந்த பூமிக்கு திரும்பி வருவார் என நம்புகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்து எதிர்காலத்தை பற்றி கிறிஸ்தவ சபைகளுக்கு சொன்ன வார்த்தைகளை கொண்டிருக்கிறது. உபத்திரவ காலத்தின் போது பூமியில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பற்றியும், சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும், அந்திகிறிஸ்துவின் நிலை, கள்ள மார்க்கத்தின் நிலைகளை பற்றி சொல்லியிருக்கிறார். மேலும் அர்மகெதொன் யுத்தத்தின் போது என்ன நடக்கும் என்று சொல்லியிருக்கிறார், இரண்டாம் வருகையின் போது என்ன நடக்கும், அவருடைய ஆயிரவருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, நித்தியத்தில் தேவன் தமது ஜனத்திற்கு திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் இதில் பதிவு செய்திருக்கிறார். இந்த தொடரில், வெளிபடுத்தின விசேஷத்தின் ஒவ்வொரு அதிகாரமாக விளக்கி சொல்ல இருக்கிறோம் அதினால் தேவன் எதிர்கால நிகழ்வுகளை பற்றி சொல்லியிருப்பவைகளை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், டீன் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இயேசு சபைக்கு கடைசியாக சொன்ன வார்த்தைகள் என்னவென்று பார்த்துகொண்டு இருக்கிறோம். சரியா? ரொம்ப முக்கியமானது. எதிர்காலத்தில் என்ன நடக்குமென்று நிறைய விஷயங்களை சொல்கிறார், எதிர்காலத்தில் அப்படி என்ன நடக்க போகிறது. இங்கு

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை பற்றி கற்றுகொடுக்க சிறந்த 3 நபர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். நம் மத்தியில் Dr. எட் ஹின்ட்சன் இருக்கிறார், இவர் லிபர்ட்டி பல்கலைகழகத்தில் டிவினிடி பள்ளியின் முதல்வராக இருக்கிறார். மேலும் இவர் மதங்களை பற்றிய போதனை பிரிவின் பேராசிரியராக இருக்கிறார்.

இரண்டாவதாக Dr. மார்க் ஹிட்ச்காக், துணை பேராசிரியர் இவரும் வேதாகம விளக்கத்தை பற்றி டல்லாஸ் இறையியல் செமினரியில் போதிக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராக இருந்து வருகிறார். இவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதிக்கிறார் மேலும் பல கருத்தரங்குகளிலும் போதித்து வருகிறார். இங்கு அமர்ந்திருக்கும் இவர்கள் தீர்க்கதரிசனங்களை பற்றி எழுது நூற்று நாற்பதுக்கும் மேலான புத்தகங்கள் நம்மிடம் இருக்கிறது, இது பல மணிநேர தியானம் மற்றும் ஆய்வுகளின் பலன்.

இப்ப, நாம், நம்முடைய தலைப்பிற்கு நேராக போகலாமா, அதுதான் இந்த வெளிபடுத்தின விசேஷத்தின் புத்தகம். சரி, எட், நீங்க துவங்கிடுங்க. இந்த தகவல்களை நமக்கு கொடுத்தது யார்? இது எப்படி எழுதப்பட்டது? நீங்க முதல் பக்கத்தை திறக்கும்போது அதில் முக்கிய பங்காக இருக்கும் நபர்களை பற்றி முதல்ல சொல்லுங்க.

டாக்டர் எட் ஹிந்த்சன்:...இந்த புத்தகத்தின் முதல் வசனமே சொல்லுகிறது இது தமது ஊழியனாகிய யோவானுக்கு அருளப்பட்ட இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிபாடு. ஆரம்பத்தில் இருந்தே யேசுதான் தெய்வீகமான ஆக்கியோன் என்றும், யோவான் மனுஷிக ஆக்கியோன் என்றும் தெரிகிறது. இப்ப தேவன் உயிர்த்தெழுதலுக்கு பிறகு 65ஆண்டுகள் கழித்து வ்ளிபட்டுகிறார், பத்மூ தீவில் யோவானுக்கு தரிசனமாகி எதிர்கால நிகழ்வுகளை வெளிபடுத்துகிறார். இவர் இயேசுவோடு மூன்று  ஆண்டுகள் கூடவே ஊழியம் செய்த அவருடைய சீஷன், ராபோஜனத்தின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த சீஷன், சிலுவையின் நிகழ்வின் போது அங்கிருந்த ஒரே சீஷன். யோவானுக்கு மேல எந்த சீசனுக்கும் இயேசுவோடு அதிக தனிப்பட்ட ஐக்கியம் இல்லை. இருந்தும் மகிமையடைந்த கிறிஸ்து அவனுக்கு வெளிப்பட்டு தரிசனமானபோது, வேதம் சொல்கிறது இதே அதிகாரத்தில் யோவான் செத்தவனை போல அவர் பாதத்தில் விழுந்துகிடந்தான். இது என்ன சொல்கிறது என்றால் நாம பரலோகம் போகும் அந்த நாளில், நீங்க ஒருவேளை, “நா இயேசுவை பார்க்கணும், என்று நினைகிற மாதிரி  சும்மா உள்ள போய் பார்க்க முடியாது. “இயேசுவே, ஹாய்.” யோவானே தெய்வீகமான கிறிஸ்துவுக்கு முன்னால பணிந்து தொழுதுகொண்டார் என்றால், நீங்களும் நானும் எங்க இருப்போன்னு நினைக்கிறீங்க?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. எனக்கு பிடித்திருக்கிறது; ஏன்னா நீங்க இப்பதா அதை பற்றி சொன்னீங்க. யோவான் இயேசுவை அவருடைய மகிமையில் பார்க்க, அவருடைய பாதத்தில் செத்தவனை போல விழுந்து கிடைக்கிறார். ஆனா எனக்கு பிடித்தது என்னன்னா இயேசு அவனருகில் வந்து அவனுடைய தோலில் தனது கையை வைத்து அவனை பார்த்து, “பயப்படாதே, நா நிறைய காரியங்களை சொல்லபோகிறேன் என்றார். சரி, மார்க், எல்லா கிறிஸ்தவர்களும் வெளிப்படுத்தலை வாசிக்க வேண்டிய அவசியம் என்ன? இது ரொம்ப சுவாரஸ்யமான தகவல்களை கொண்டிருக்கிறது, இது இயேசு சபைக்கு சொன்ன கடைசி வார்த்தைகள். இந்த வசனங்களில் சில வாக்குத்தத்தங்களும் இருக்கிறது. ஏன் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை வாசிக்க வேண்டும் என்ற காரணத்தை சொல்லுங்கள்.

டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:...சரி, இது எதிர்காலத்தை பற்றி சொல்லுகிற புத்தகம். ஆனா இந்த வெளிபடுத்தல் புத்தகத்தில் சில காரியங்கள் சேர்க்கப்பட்டு ஊக்குவிக்கும் புத்தகமாக இருக்கிறது, ஏன்னா இந்த மூன்றாவது வசனம் சொல்கிறது, “இதை வாசிக்கிறவனும் அதை கேட்க்கிரவனும் இந்த தீர்க்க தரிசன வசனங்களை கைகொள்ளுகிறவன் எவனோ அவர் பாக்கியவான், காலம் சமீபமாக இருக்கிறது.” இந்த தனித்துவமான வாக்குதத்தோடு

இருப்பது இந்த ஒரு புத்தகம் மட்டும்தான். அதனாலதான் பலர் இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை “ஆசீர்வாத புத்தகம் என்கிறார்கள்.” இதுல இதை வாசிப்பவர்களுக்கும் இதை கேட்கிறவர்களுக்கும் இதை கைகொள்ளுகிறவர்களுக்கும் அதன் படி செய்கிறவர்களுக்கும் இதில் எழுதி இருப்பதன்படி செய்கிறவர்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதம் உண்டு. அதனால இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தி பற்றிய இந்த நிகழ்ச்சியில் நம்மோடு கலந்துகொள்ளுகிறவர்கள், ஒவ்வொருவரும் இந்த நாட்களில் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டியது அவசியம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே. இந்த வசனத்தை வாசிக்கும்போது அங்கு சொல்லப்பட்டு இருக்கிறது, “யோவான் ஆசியாவில் உள்ள ஏழு சபைகளுக்கு எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும் அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளும் உண்மையுள்ள சாட்சியும் மரித்தோரிலிருந்து பிறந்தவரும், பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.” இங்க ஒரு கேள்வி எழும்புகிறது. இது திருத்துவத்தில் இருந்து வருகிறது, தேவன் ஒருவர்தான் ஆனால் அவர் மூன்று நபராக திகழ்கிறார். உண்மை என்னன்னா ஜனங்கள் பொதுவாக இந்த சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளை

பற்றி கேள்வி எழுப்புகின்றனர். இது பரிசுத்த ஆவியானவர் என்று ஏன் நம்பவேண்டும்?

டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:...சரி, இதற்கு முன்பாக அவர் சொல்லுகிற காரியம் என்னவென்றால், "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய தேவன்," மேலும் அதை தொடர்ந்து பார்க்கும்போது, இது இயேசுவை குறிப்பதாக காணப்படுகிறது. இங்க பிதாவாகிய தேவனையும் இயேசுவை பற்றி விவரிப்பதற்கு இடையில் ஏழு ஆவிகளை பற்றியும் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த ஏழு ஆவிகள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் இந்த திருத்துவத்தில் பங்கு இருக்கிறது. அதுமட்டுமில்ல ஏழு ஆவிகள்ன்னு சொல்லும்போது, எழுத பரிசுத்த ஆவிகள் என்று அர்த்தமாகாது. ஏழு என்ற எண் வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஐம்பத்தி நான்கு முறை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. இது முழுமையடைந்த பரிபூரணமடைந்த ஒரு தன்மையை குறித்து கூறுகிறது. இது முழுமையான பூரணமான நிலை குறித்து கூறுகிறது, அதாவது பரிசுத்த ஆவியின் வல்லமையின் பரிப்பூரணமான நிலை, அதாவது இது ஏசாயா 11:1-2 வசனங்களை குறிப்பதாக காணப்படுகிறது அங்க பரிசுத்த ஆவியின் ஏழு ஊழிய நிலையை பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** தொடர்ந்து பார்ப்பதற்கு முன்பு சபை என்ன கேள்விபட்டது என்று பார்க்கும்முன், சபைகளுக்கு என்ன செய்தி சொல்லப்பட்டது, ஏழு சபைகள், இதுக்கு முன்னால இயேசுவை பற்றி சொல்லுங்க ரான். இது ரொம்ப முக்கியமானது. இயேசு எதற்காக பூமிக்கு வந்தார்? அவருடைய நாமங்கள் என்ன? மகைமையடந்த நபராக அவர் எப்படி காணப்பட்டார்?

டாக்டர் ரான் ரோட்ஸ்:...அது, முதலாம் அதிகாரத்தில் நாம பார்க்க கூடிய வியப்பான ஒரு வெளிப்பாடாக இருக்கிறது. இங்க இயேசுவை ஆல்பா ஒமேகா என்று அழைக்கப்படுவதை பார்க்கிறோம். இது கிரேக்க எழுத்துக்களின் துவக்கமும் முடிவுமாக இருக்கிறது. ஒன்றை நீங்க புரிஞ்சுக்கணும் தேவனுகென்று பயன்படுத்தப்படும் நாமங்கள் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. அவை தேவனுடைய சுபாவத்தை பற்றி வெளிப்படுத்துவதாக இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவன் ஆல்பா ஒமேகா என்று அழைக்கப்படுவதை பார்க்க முடியும். உதாரணமாக, ஏசாயா நாற்பத்தி நாலு மற்றும் நாற்பத்தி எட்டு. ஆனா இந்த வசனத்தில் இயேசு ஆல்பா ஒமேகா என்று அழைக்கப்படுகிறார், இதற்கு அர்த்தம் அவர் தான் தேவன் என்பதாகும். அவர் நித்தியமானவர், அவர் சர்வ வியாபி, அவர் சர்வத்துவம் உடையவர். இதுல முக்கியமாக புரிந்துகொள்ள வேண்டிய காரியம் என்னன்னா இந்த வெளிபடுத்தல் புத்தகம் முழுவதும் இவை வெளிப்பட்டு

வருவதை பார்க்க முடியும், ஏன்னா உபத்திரவ காலம் முழுவதும் இயேசுதான் சர்வ வியாபியாக சர்வ சக்ராதிபதியாக இருப்பார் என்பதை வெளிபடுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இந்த காரியம் எனக்கு ரொம்ப பிடிக்கும் வேதம் சொல்கிறது, "நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.

டாக்டர் ரான் ரோட்ஸ்:...சரி, இது கொஞ்சன் அச்சுறுத்தலா இருக்கும் ஏன்னா இவர் தேவன், நித்திய தேவன், உங்களையும் என்னையும் அதிகமாக நேசித்ததனால நித்தியத்தை விட்டிறங்கி நமக்காக சிலுவையில் மரிக்கும் நோக்கத்திற்காக மனுஷ சாயலை ஏற்றுகொண்டார். இதை காட்டிலும் மேலான அன்பு ஒன்றுமில்லை. அதனால இந்த புத்தகத்தின் துவக்கத்திலேயே தேவனுடைய முக்கிய நோக்கம் மனுகுலத்தை மீட்பது தான் என்பது உறுதி செய்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, மார்க், இப்ப உங்ககிட்ட வர்ரேன். யோவான் இயேசு வரப்போகிறார் கண்கள் யாவும் அவரை காணும் என்று சொல்றார், இல்லையா, அவரை குத்தினவர்களும் அவரை பார்ப்பார்கள், பூமியின் சகல ஜாதிகளும் அவர் நிமித்தமாக புலம்பி

அழும் என்கிறார், இதை எப்படி யோவான் இயேசுவின் இரண்டாம் வருகையை பற்றி சொல்லுகிறார் எடுத்துக்கொள்ளப்படுதலை சொல்லலன்னு தெரியும்?

டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:...இப்ப, சபை எடுத்துகொள்ளப்படுதல் என்ற, நிகழ்வு சம்பவிக்கும்போது இயேசு பூமிக்கு இறங்கி வரமாட்டார். அதாவது இதை பற்றி 1 தெசலோனிக்கேயர் நான்கு போன்ற பகுதிகளில் சொல்லப்பட்டு இருக்கிறது நாம ஆகாயத்தில் மேலே எடுத்துகொள்ளப்படுவோம், விசுவாசிகள் எல்லாம்; ஏற்கனவே மரித்தவர்கள் உயிரோடு எழுந்து தங்கள் புதிய சரீரங்களை பெற்றுகொள்வார்கள். உயிரோடு இருக்கிற அனைவரும் அப்படியே எடுத்துக்கொள்ளப்பட்டு, மத்திய ஆகாயத்தில் தேவனை சந்திக்க சென்றிடுவோம். இந்த எடுத்துகொள்ளப்படுதல் சம்பவிக்கும், 1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தின் படி, “ஒரு நொடியில், இமைபொழுதில் சம்பவிக்கும், “இங்கு பூமியின் கண்கள் யாவும் இதை காணும் என்று இருக்கிறது, அப்ப இரண்டு வித்தியாசமான நிகழ்வு சம்பவிக்கும். அதாவது எடுத்துகொள்ளப்படுதலின் போது விசுவாசிகள் எல்லாரும் இயேசு கிறிஸ்துவோடு இருக்கும்படி எடுத்துகொள்ளப்படுவாங்க. இந்த நிகழ்வை உலகம் பார்க்க முடியாத ஒன்றாக இருக்கும். இது கண் இமைக்கும் நொடிபொழுதில் சம்பவித்திடும். இயேசுவின் இரண்டாம் வருகையை பூமியில் இருக்கிற யாவருக்கும் அது வெளிப்படையாக இருக்கும். இந்த காரணத்தினால தான் எடுத்துகொள்ளப்படுதலும்

இயேசு பூமிக்கும் மீண்டும் வருவதற்கும் இடையில் இடைவெளி இருக்குன்னு நம்புகிறோம்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்**:...அதாவது, எடுத்துகொள்ளப்படுதல் என்பது திடீர் நிகழ்வுன்னு சொல்ல முடியும், அது எப்ப வேண்டுமானாலும் சம்பவிக்க முடியும். எடுத்துகொள்ளப்படுதலுக்கு முன்பு எந்த தீர்க்க தரிசனமும் நிறைவேறிட வில்லை. ஆனா இரண்டாம் வருகைக்கு அதுக்கு முன்னால இருக்க போகிற ஏழு வருடங்கள் ஆதாரமாக இருக்கு. இந்த அடையாளங்கள் எல்லாம் நமக்காக வெளிப்படுத்தல் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதை பற்றியும் நாம பார்க்க போறோம். மார்க், ஒரு முக்கியமான கேள்வி. ஏன் யோவான் பத்மூ தீவிற்கு போனார், எப்போதிலிருந்து அங்க இருந்தார்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்**:...இங்க, டொமிடியன் என்று சக்ரவர்த்தியால ஜான் தண்டிக்கப்படுகிறார், ரோம சக்கரவர்த்தி டாமிடியன், இவர் சபைகளை விட்டு தள்ளி பத்மூ என்னும் தீவுக்கு போறாரு, தனகிருந்து செல்வாக்கை விட்டுட்டு போறாரு. தனது 90 வது வயதில் அங்கு அனுப்பட்டு இருந்தார். சபை வரலாற்றில் இருந்து ஒன்று அறிந்துகொள்கிறோம், இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரேனியஸ் போன்றவர்கள், யோவான் மரித்த பிறகு சுமார் என்பது வயது வரை இருந்தார். அதாவது யோவான் இறந்து பிறகு 50-60

வருடங்கள் இருக்கும். இரேனியஸ் தான் யோவான் ரோம பேரரசர் டாமிடியனால் அங்கு அனுப்பப்பட்டதை சொல்கிறார், அவர் இயேசு கிறிஸ்துவை பற்றிய சுவிசேஷத்தை பிரசங்கித்ததினால் இந்த தண்டனையை பெற்றாராம். பேதுரு பவுலை போல ஐவரும் ரோம அரசர்களால் உபத்திரவப்படுத்தப்பட்டு இருக்கிறார். அவங்க இரண்டு பேரும் ரத்த சாட்சியா மரித்தார்கள், யோவான் அந்த தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். வேதம் சொல்கிறது அவர் தேவனுடைய வார்த்தையின் நிமித்தமும் இயேசு கிறிஸ்துவை அறிவித்து தனது சாட்சியின் நிமித்தமும் அங்கு அனுப்பப்பட்டார் என்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** எத்தனை சபை பிதாக்கள் இதை பதிவு செய்திருக்கிறார்கள், நீங்க சொல்றது பதிவாகியிருக்குதா?

டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:...ஓ, நிறைய பேர் இருக்காங்க. யோவான் டாமி டியன் அரசர் காலத்தில் தான் இப்படி பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டார் என்று தாசன் கணக்குல எல்லாரும் சொல்லியிருக்காங்க. டொமிடியன் கிபி 81 முதல் கிபி 96 வரை இருந்தார். அவருடைய அரசாட்சியின் இறுதி காலத்தில், இப்படி நடந்தது அதனால யோவான் அங்க இருந்து இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தை எழுதிய காலத்தை நாம கிபி 96 என்று எடுத்துகொள்ளுகிறோம்.

டாக்டர் எட் ஹிந்த்சன்:...இன்னொரு அடையாளம் என்னன்னா, ஜான், அப்பத்தா நடந்திருக்கும் என்று சொன்னால், இது எருசலேமின் அழிவிற்கு பிறகுதான் எழுதப்பட்டு இருக்கிறது. இது சிலர் நிரூபிக்க நினைக்கிறது போல நீரோ வின் காலத்தில் எழுதப்படவில்லை. இது முதலாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டு இருக்கிறது. யோவான் தான் பூமியில் வாழ்ந்த கடைசி சீஷன், இயேசு எதிர்காலத்தில் என்னவெல்லாம் சம்பவிக்க போகிறது என்பதை அவனுக்கு வெளிபடுத்தினார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** எட், யோவானிடத்தில் இதை எழுதுவதற்கான நோக்கம் என்னவென்று இயேசு கூறினார்? அவர் என்ன சொன்னார்? இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் எழுதுவதற்கு என்ன காரணம் என்று சொன்னார்?

டாக்டர் எட் ஹிந்த்சன்:...ஆமா, அவர் இதுவரைக்கும் சம்பவித்ததும், சம்பவிக்கிறதும் சம்பவிக்க போகிறதுமான காரியங்களை பற்றி அவர் பேசும்படி விரும்பினால்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அந்த மூன்று என்ன?

டாக்டர் எட் ஹிந்த்சன்:...மூன்று நிலைகளாக பிரிக்கலாம்: கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வருங்கால காரியங்கள். அவர் என்ன சொல்கிறார் என்றால், “நான் வரலாற்றின் தேவனாக

இருக்கிறேன். நான் சபைகளின் தேவனாக இருக்கிறேன் அதுதான் நிகழ்காலம். நான் எதிர்காலத்தின் தேவனாக இருக்கிறேன்.” இது இந்த புத்தகத்தில் வரும் திரித்துவங்களில் ஒன்று. புத்தகம் முழுவதும் மூன்று நிலைகளை கொண்டிருக்கிறது. ஆசீர்வாதம் நிறைந்த பகுதி கூட மூன்று காரியங்களை சொல்கிறது: தேவனாகிய நபர், இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய கர்த்தர். மூன்று நிலைகள் இருக்கு. அதோடு 1,200 கூட அல்லது மற்றும் என்ற வார்த்தை வெளிப்படுத்தலில் உள்ளது. சின்ன கிரேக்க வார்த்தையான, காய், காயாமீட்டார் போல இந்த புத்தம் சுழற்சியான தீர்க்க தரிசனங்கள் அல்ல மறுபடியும் துவங்கின இடத்திலேயே முடியும் விதமான சுழற்சிகள் இல்லை. அது ஒரு நிகழ்வில் இருந்து மற்றொரு நிகழ்வுக்கு கடந்து முன்னேறி போவதாகும். இது நடந்தது, அடுத்தது இது, அடுத்தது இது. இந்த புத்தகத்தை வாசிக்கும் ஆர்வத்தை உண்டாக்கும். எதிர்காலத்தில் சுவாரஸ்யமான ஒன்று நடக்கும், அதுதான் இயேசுவின் வருகை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ரான், முதல் அதிகாரத்திலேயே, சில தலைவர்கள் ஒன்று சேர்ந்து இதை வாசித்து நிதானித்த போது இது தேவன் யார் என்று சொல்வதாக சொன்னார்கள், அவங்க நிறுத்தி நிதானமா இது தேவனை பற்றி இயேசுவை பற்றி பரிசுத்த ஆவியை பற்றி என்ன சொல்கிறது என்று பார்க்க முற்பட்டார்கள். ஏன்னா இதுல முழுதும் தேவனுடைய சர்வத்துவத்தை பார்க்க முடியும், அது

அவர்களுடைய விசுவாசத்தை அதிகரிப்பதாக இருந்தது. மேலும் இது என்னவெல்லாம் செய்தது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...சரி, எதிர்காலத்தில் என்ன இருக்கிறது என்ற நம்பிக்கையை நமக்கு கொடுக்கிறது. இந்த வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் எழுதப்பட்ட காரணங்களில் ஒன்று ஏழு சபைகளில் உபத்திரவப்பட்ட விசுவாசிகளுக்கு உதவுவதே. கடைசி அதிகாரத்தை அறிந்திருந்தால் நாம எப்படி ஜெயிப்போம் என்று தெரியும், இதை என்னோட பழைய நண்பன் Dr. மார்டின் சொன்னார், இது நிகழ்காலத்தை எதிர்கொள்ள பெலத்தை கொடுக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஆல்ரைட். இப்ப, இயேசு யோவானிடம் சொல்கிறார், 'நீ ஏழு சபைகளுக்கு கடிதம் எழுதும்படி விரும்புகிறேன்.' இந்த ஏழு சபைகள் யார் யார்? ஏன் இயேசு இப்படி செய்ய விரும்பினார்? இதை பற்றி நாம் திரும்ப வந்ததும் பார்க்க இருக்கிறோம், தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம இப்போது Dr. எட் ஹின்ட்சனோடு பேசிக்கொண்டு இருக்கிறோம், கூடவே நம்முடன் Dr. மார்க் ஹிட்ச்காக் மற்றும் Dr. ரான் ரோடசும் இருக்கிறார்கள். நாம் பார்த்துகொண்டு இருப்பது, ஏன் தேவன் இந்த வெளிப்படுத்தின விசேஷத்தை கொடுத்திருக்கிறார்? நாம இப்ப முதல்

அதிகாரத்தில் இருக்கிறோம். இயேசு யோவானுக்கு பத்மூ தீவில் இருக்கும்போது தரிசனமாக இந்த தகவல்களை எல்லாம் அவருக்கு சொல்லுகிறார். அவர் சொன்ன முதல் காரியம் என்னவென்றால், நான் கூறும் காரியங்களை நீ ஏழு சபைகளுக்கும் எழுத வேண்டும்." சரி, எட், இங்கிருந்து ஆரம்பித்திடுங்க. இந்த ஏழு சபைகள் யார்?

டாக்டர் எட் ஹிந்த்சன்:...அதே ரோம நெடுஞ்சாலைகளில் இணைக்கப்பட்ட ஆசியாவின் ஒரு பகுதியில் தான் இந்த ஏழு சபைகளும் இருந்தது. முதலாம் நூற்றாண்டில் உண்மையாவே இருந்த சபைகள் அவை. இயேசு கர்த்தருடைய சபையை பிரதிபளிக்கும் விதமாக இயேசு குத்து விளக்கின் மத்தியில் தோன்றினார், அதிலிருந்து சபையின் தூதர்களோடு பேசுகிறார். அவர்கள் நேர்த்தியாக செய்த காரியங்களுக்காக அவர்களை அவர் பாராட்டுகிறார், 'தொடர்ந்து செய்' தவறான காரியங்களை செய்யும்போது கண்டிக்கிறார் - மனந்திருப்பனும் மாற்றிகொள்ளனும் சரிசெய்யணும்.

ஏழு சபைகள். எபேசு தான் தாய் சபையாக இருந்திருக்கும், ஆசியா மைனரில் மிகப்பெரிய சபை. இந்த சபை பவுல் மற்றும் யோவான் மற்றும் தீமோத்தேயுவினால் நடத்தப்பட்டதாக இருந்தது. எபேசு சபையை காட்டிலும் வேறு எந்த சபையிலும் இந்த மாதிரியான சபை வரலாறு இல்லை. இருந்தாலும் இத்தனை வருட அனுபவங்கள் இருந்தும் அவர்களை பார்த்து, ' ஆதியில் கொண்டிருந்த அன்பை

விட்டாய் என்கிறார்.” பல நன்மையான காரியங்கள் உன்னிடத்தில் உண்டு, இருந்தாலும் ஆதி அன்பை விட்டு விட்டாய்,’ தேவன் மீதுள்ள அன்பை விட்டாய்.

அடுத்த அவர் அங்கிருந்து அடுத்த சபையை நோக்கி போகிறார், சிமிர்னா, உபத்திரவப்பட்ட சபை. “மரணபரியந்தம் நீ உண்மையுள்ளவனாக இரு.”

அடுத்து பெர்கமு, உள் அரசியல் சூழ்ந்த சபை. ஆசியாவில் ரோம ராணுவத்தின் தலைமையகத்தை கொண்டிருந்த பட்டணத்தில் இருந்த சபை, இங்கு கிறிஸ்தவர்கள் அரசாங்கத்தோடு ஒன்றிபோகும்படி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலை.

அடுத்த தியத்திரா வருகிறார், இது ரொம்ப செழிப்பான சபை. ஏழு பட்டணங்களில் சிறியதாக இருந்தாலும் பெரிய கடிதம் இதுக்குதான் ஏன்னா இங்க அதிகப்படியான இறையியல் பிரச்சனைகள் இருந்தது. அந்த ஐசுவரியம் தான் அவர்களை கிறிஸ்துவுடனான அர்ப்பணிப்பில் இருந்து விளக்கிவிட்டது.

அடுத்தது சரத்தை, பெலனற்ற சபை. ‘கொஞ்சம் குறைய மரித்து போயிருந்தீங்க. எழுந்திரு, உன் விளக்கு கொஞ்சம் கொஞ்சமாக அனையப்போகிறது.’

அடுத்ததாக பிலதெல்பியா, விடாமுயற்சியுடைய சபை. ‘உனக்கு கொஞ்சம் பெலன் இருக்கிறது. திறந்த வாசலை உனக்கு முன்பாக

வைத்திருக்கிறேன். நீ விடா முயற்சியோடு பற்றிகொண்டிருந்தபடியால் இந்த வாசலை திறந்து உலகத்தை சென்றடையும் சந்தர்ப்பத்தை உனக்கு தருகிறேன்.'

இறுதியாக இருப்பது, லவோதிக்கேயா. 'நீ அனலுமின்று குளிருமின்றி , வெதுவெதுப்பாக இருக்கிறாய்.' அசுத்தமான சபை, 'நீ மாறாவிட்டால் உன்னை வாந்திபண்ணி போடுவேன்.' கடைசியாக சொல்றாரு, அந்த சபையின் கதவு அருகே நின்று தட்டுகிறார், 'சபையின் தேவனை சபைக்கு வெளியில் தள்ளி விட வேண்டாம்."

அதாவது, ஜான், என்னை பாதித்த ஒரு விஷயம் என்னன்னா ஒவ்வொரு சபைக்கும் அதனுடைய குறிப்பான தேவையை அறிந்து இந்த கடிதங்கள் எழுதப்பட்டது, அதே சமயத்தில் ஒவ்வொரு கடிதத்தின் முடிவிலும் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தை, "ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்." இந்த சபைகளில் கையாளப்பட்ட கோட்பாடுகள் எல்லா காலத்திலும் இருக்கிற சபைகளுக்கு பொருந்துவதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ரான், உண்மை என்னன்னா, நிறைய தலைவர்கள், வெளிப்படுத்தலில் இருக்கிற அடையாளங்களை அவர்கள் பார்க்கும் போது சொல்வது இதுதான், 'இந்த அடையாளம் என்ன என்று யங்களுக்கு தெரியல." இப்ப இங்க, ஏழு நட்சத்திரங்கள் என்று சொல்லும்போது, ஏழு குத்துவிளக்கு என்று சொல்லும்போது, அவர்

எதை குறிக்கிறது, அது என்னனன்னு குழப்பி கொள்ள அவசியம் இல்லையே. அதற்கு கீழுள்ள வசனங்களை வாசிக்கும்போது, வெளிப்படுத்தல் 1:20, உண்மையில் வேதமே அந்த அடையாளங்கள் என்னவென்று சொல்லுகிறது. அதை பற்றி சொல்லுங்க.

டாக்டர் ரான் ரோட்ஸ்:...ஆமா, அது சரிதான். இதனால்தான் வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் உங்களை அச்சுறுத்தாம இருக்க காரணம் இதுதான். அந்த அடையாளங்கள் என்னன்னு வேதமே சொல்கிறது, அதோட அதற்கு என்ன அர்த்தம் என்றும் சொல்கிறது. இப்ப, உதாரணமாக, பொன் விளக்கு தண்டுகள். நீங்க இதை வாசிக்கும்போது ஒருவேளை கேட்டிருக்கலாம், “இந்த, பொன் விளக்கு தண்டுகள் என்றால் என்ன? ஆனா நீங்க தொடர்ந்து வாசிச்சுட்டே வந்தீங்கன்னா அது ஏழு சபைகள் என்று அறிந்துகொள்வீர்கள். அதற்கு அடுத்தது ஏழு நட்சத்திரங்கள்; இன்னும் கீழ வாசிக்கும்போது அந்த சபைகளும் ஏழு தூதர்கள் தான் அதுன்னு புரியும். அடுத்த தூபவர்க்கம் பற்றி வாசிக்கலாம்; அதெல்லாம் தேவனுடைய ஜனங்களின் ஜெபத்தை குறிக்கிறது என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இது மாதிரி, சரியான நேரத்தில் புரிந்துகொள்ளும்படியான நிறைய அடையாளங்கள் இந்த வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் நமக்காக கொடுக்கப்பட்டு இருக்கிறது, இதெல்லாம், நிச்சயமா, நமக்கு புரிந்துகொள்ள சுலபமாக இருக்கும்படி இருக்கு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. மார்க், சொல்லுங்க, நீங்க ஒரு பாஸ்டர். இயேசு சொல்கிற காரியத்தில் நா விரும்பி ஆர்வமா பார்க்கிறது என்னனா அவர் சொல்வது தான், “இந்த ஒவ்வொரு சபைகளுக்கும் நடுவில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன் என்கிறார்.” என்ன நடக்கிறது என்பதை அவர் பார்க்கிறார், அவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது அவரை எப்படி தொழுது கொள்ளுகிறார்கள் என்று பார்த்துகொண்டு இருக்கிறார். ஆமா, இது, சபையை குறித்து யோசிக்கும்போது அச்சத்தை உண்டாக்கும் விஷயமாக இருக்கிறது. உங்க சபையை குறித்து யோசிக்கும்போது, அங்க என்ன நடந்துட்டு இருந்தாலும், அவர் அதற்கு மத்தியில் இருக்கிறார், எல்லாவற்றையும் அவர் பார்க்கிறார்.

எபேசு சபையை பார்க்க எனக்கு ரொம்ப பிடிக்கும், ஆமா, அங்க ஒரு சில விஷயங்களை இப்ப பார்க்கலாம். இந்த சபையை யோசித்து பாருங்க, இந்த சபையின் மேய்ப்பர். அவர் சொல்கிறார், எனக்கு தெரியும்,’ இயேசு சொல்கிறார், “உன் கிரியைகள், உன் உழைப்பு, உன் பொறுமை, தீமையை உன்னால் சகிக்க கூடாத நிலை. தங்களை அப்போஸ்தலர்கள் என்று சொல்லியும் அப்போஸ்தலர்கள் அல்லாதவர்களை நீ சோத்தித்து பொய்யரென்று அறிந்துகொண்டாய். நீ சகித்துக்கொண்டு இருக்கிறதையும் பொறுமையாயிருக்கிறதையும் அறிவேன். என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல்

பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.” சரி, இப்ப, நா சொல்லட்டுமா, இதுதான் அங்கிருந்த சபைகளிலேயே சிறந்த சபையா இருந்தது.

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்**:...அது உண்மைதான். இது பைவ் ஸ்டார் சபை. அதாவது, இது புதிய ஏற்பாட்டில் கொடிகம்பம் உரிமை பெற்ற சபை போன்றது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்படியிருந்தும் அவர் சொல்கிறார், “ஆயினும், உன்பேரில் எனக்கு ஒரு குறை உண்டு. நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய்.” அவங்க அதை இழந்திடல்ல, அவங்க அதை விட்டு கொஞ்சம் விலகி போயிட்டாங்க; அதை விட்டுட்டாங்க. அந்த ஆதி அன்பு என்னது?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்**:...சரி, இங்க ஆதி அன்பு என்பது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள அன்பு என்று நினைக்கிறேன். அதாவது, அவங்க இயேசு கிறிஸ்துவிடம் வந்து அவரை விசுவாசிக்க வேண்டும், அவரை நம்பனும், அவர்களுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார். ஆனா காலப்போக்கில், அதாவது, சுவாரஸ்யமா இருக்கும், என்னன்னா, இயேசு கிறிஸ்துவுக்கான நமக்கு அன்பு கூட மங்கி போகிறது. இந்த ஜனங்கள் மிகுந்த அலுவல் நிறைந்தவர்களாக இருந்தாலும், தேவனுடைய காரியங்களில் அலுவல் நிறைந்து இருக்காங்க, அவங்களோட இறையியல் எல்லாம் சரியா இருக்கு, அதாவது, நீங்க இறையியலில் மிசுக்கு இல்லாதவர்களாக இருக்க முடியும்

இருந்தாலும் அதே சமயம் ஆவிக்குரிய நிலையில் குளிர்ந்து காணப்பட வாய்ப்பிருக்கு. இப்படிதான் அவங்க இருந்தாங்க. அவங்ககிட்ட சரியான உபதேசம் தான் இருந்துச்சு. அவங்களுக்கு சரியானது எதுன்னு தெரியும். ஆனா அவங்க இயேசு கிறிஸ்துவுக்கான அன்பிலும் வைராக்கியத்திலும் இருந்து விழுந்துவிட்டார்கள். இது இன்றைக்கு நமக்கு வலுவான எச்சரிக்கையாக இருக்கிறது, நாம இயேசு கிறிஸ்துவுக்கான அன்பை மாற்றியமைக்கும் எந்த விஷயத்தையும் அனுமதிக்க கூடாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, டான், இங்க எபேசு சபையை பற்றியும் மற்ற சபைகளை பற்றியும் சொல்லப்பட்டு இருக்கிறது, 'ஜெயம் கொள்ளுகிறவர்களுக்கு ஆவியானவர் சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்க்கக் கடவன்." அதற்கு அப்பறம் அங்க பலன்கள் என்னன்னு இருக்கு. ஜெயம்கொள்ளுகிறவன் யார்? இது விசேஷித்த கிறிஸ்தவ கூட்டத்தினரா அல்லது எல்லாரையும் குறிக்கிறதா?

டாக்டர் ரான் ரோட்ஸ்:...சிலர் இது கிறிஸ்தவர்களில் உயர்ந்த நிலையினரோ என்ற எண்ணம் தோன்றுமென நினைக்கிறேன். அதோட பல சமயங்களில் நான் யோசித்திருக்கிறேன் சோதனைகளை மேற்கொள்ளும் அளவிற்கு நாம சிறந்தவர்களா நம்முடைய இரட்சிப்பை இழந்திட மாட்டோமே என்று யோசித்து பார்ப்பார்களோ. ஆனா வேதத்தில் ஜெயம் கொள்ளுகிறவன் என்று

சொல்லப்பட்டிருக்கும் ஒவ்வொரு இடத்தையும் பார்க்கும்போது, அந்த வார்த்தை உண்மையாகவே வேதத்தில் எந்த அர்த்தத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்ற தன்மையை விளங்கிகொள்கிரோமா? இப்ப ஒன்று யோவான் ஐந்து நான்கு ஐந்தை வாசிக்கும்போது, “தேவனால் பிறந்த எவனும் உலகத்தை ஜெயிப்பான். இந்த ஜெயமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கிறது - நமது விசுவாசம்.” இதற்கு என்ன அர்த்தம் என்றால் நாம எல்லாருமே ஜெயம் கொள்கிறவர்கள் தான். அதை யோசித்து பார்க்கும்போது, ஜான், இந்த ஏழு சபைகளிலும் ஜனங்களுக்கு கொடுக்கப்படும் வித்தியாசமான பலன்களை பற்றி பார்க்கும்போது, இதெல்லாம் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் உண்மையானதாகதான் இருக்கிறது. உதாரணமாக, இதுல ஒரு வாக்கியம் இருக்கிறது, அதாவது, ஒரு சபை இரண்டாம் மரணத்தை அடைவதில்லை என்று இருக்கிறது. அப்ப, நித்திய மரணமாகிய இரண்டாம் மரணத்தை கிறிஸ்தவர்கள் அனுபவிக்க மாட்டார்கள். அதனால, நா சொன்னமாதிரி,ம் ஜெயம் கொள்ளுகிறவன் என்பவன் தேவனால் பிறந்தவன், அதற்கு அர்த்தம் எல்லா கிறிஸ்தவர்கள் என்பதுதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, எட், இங்க சிமிர்னாவை பற்றி உங்களிடம் பேச நிரும்புகிறேன். உண்மையில், அவர் சொல்கிறார், “நீ உபத்திரவத்தை சகிக்கனுன்னு சொல்றாரு. அதாவது, “என்ன சொல்றாருன்னா, “உங்களில் சிலரை பிசாசானவன் சோதிக்கும்படிக்கு

சிறைகளில் போடுவான்." சரியா? அதாவது, ஆரோக்கியம், செல்வம், செழிப்பு இதை பற்றிய உபதேசங்கள் இந்த வரிகளை வாசிக்கும்போது அப்படியே மங்கிபோவது போல இருக்கு, பத்து நாட்கள் உபத்திரவத்தை அனுபவிப்பாய்." அதுமட்டுமல்ல, அதாவது, 'உண்மையாயிரு, உங்களில் சிலர் மரிக்க நேரிடும் என்கிறார்.' இல்லையா? இது பல நூற்றாண்டுகளை கடந்து வந்து விட்டது. நீங்க சொன்னீங்க, அதாவது, இந்த கடைசி வருடங்களில், அல்லது இந்த கடைசி காலத்தில், அந்த பகுதியில் எத்தனை பேர் இறந்திருப்பார்கள்?

டாக்டர் எட் ஹிந்த்சன்:...இப்ப, சிமிர்னாவில் அற்புதமான விசயன் இதுதான் இவங்க யோவானின் சொந்த சீஷர்கள், பாலிகார்ப், ஒரு தலைமுறையினர் கிறிஸ்துவின் மீது தங்களுக்கு இருந்த விசுவாசத்தை மறுதலிக்க மனதில்லாமல் அப்படியே எரிந்து போனார்கள். அதுமட்டுமில்ல இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கூட, 20,000 கிறிஸ்தவர்கள் சிமிர்னா பட்டணத்தில் இரத்த சாட்சியாக மறித்தனர், நவீன கால இஸ்மிர். இன்றைக்கும் உலகமெங்கிலும் கிறிஸ்தவர்கள் உபத்திரவத்தை அனுபவித்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஒன்றி நினைவில் வைத்துகொள்ள வேண்டும், குறிப்பாக அமெரிக்காவில் இருக்கிற நாம், உபத்திரவத்தை சகிக்கும் சபைகளின் அவல நிலையும் உலகமெங்கிலும் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தின் நிமித்தம் நிற்கும் விசுவாசிகளும் பின்வாங்குவதே இல்லை. இயேசு சொல்லியிருக்கிறார், " மனுஷர்களுக்கு முன்பாக

என்னை அறிக்கை செய்கிறவர்களை நானும் பரலோகத்தில் என் பிதாவிற்கு முன்பாக அறிக்கை பண்ணுவன். மனுஷர் முன்பாக என்னை மறுதளிக்கிறவனை பரலோகத்தில் இருக்கிற என் பிதாவிற்கு முன்பாக நானும் மறுதலிப்பேன்.' உண்மையான விசுவாசிக்கு இயேசுவுக்காக வாழ்வது சரியானது, அவருக்காக மரிப்பதும் சரியானதென்று தெரியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஓகே. மார்க், நீங்க ஒரு பெரிய சபையின் மேய்ப்பராக இருக்கீங்க. நீங்க இதை கேட்க்கும்போது, உங்களுக்கு என்ன தோணுது?இன்றைக்கு நாம பேசிகொண்டிருப்பதை உலகமெங்கிலும் இருந்து கேட்டு கொண்டு இருக்கும் நபர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள். ஒருவேளை இயேசு இந்த சபைகளுக்கு சொன்ன சில காரியங்கள் அவர்களுக்கும் பொருந்துவதாக இருக்கலாமே. அவங்க என்ன செய்யணும்? ஒரு மேய்ப்பராக நீங்க, அவங்களுக்கு என்ன சொல்ல விரும்புறீங்க?

டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:...சரி, அதாவது, ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்ட கடிதங்களை பார்க்கும்போது, மறுபடியும் மறுபடியுமாக இயேசு சொல்லுகிறார், "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உன் கிரியைகளை அறிந்திருக்கிர்ன்." முதலாவதாக நாம புரிந்துகொள்ள வேண்டிய காரியம் நமது சபைகளில் நடக்கும் அனைத்தையும் இயேசு அறிந்திருக்கிறார். அவர் தான் இந்த குத்துவிளக்குகளின் மத்தியில்

உலாவுகிற கர்த்தர். அவர் இதற்கு நடுவில் இருக்கிறார். என்ன நடக்கிறதென்று அவருக்கு தெரியும். பெர்கமுவில் இருக்கிற ஒரு சபைக்கு அவர் சொல்லுகிறார், "நீ எங்கே இருக்கிறாய் என்றும், எங்கே வாசம் பண்ணுகிறாய் என்றும் எனக்கு தெரியும்.' நாம எங்க வசிக்கிறோம் என்பதும் இயேசுவுக்கு தெரியும்; நாம என்ன செய்கிறோம் என்று அவருக்கு தெரியும். அவரை நாம ஏமாற்ற முடியாது. துவக்கமாக நாம அதை புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த சபைகளுக்கு எழுதப்பட்ட இந்த கடிதங்களை நாம் வாசிக்கவேண்டும் தேவன் கூறுகிற காரியங்களை கேட்க்க வேண்டும் நாம செய்கிற சில நல்ல காரியங்களையும் அவர் எடுத்து சொல்லுகிறார். அவைகளை நாம் கைகொண்டு தொடர்ந்து அந்த மாதிரிகளை பின்பற்றிட வேண்டும்.

ஆனா சில கடினமான கண்டனங்களும் ஏழு சபைகளுக்கு எழுதிய கடிதத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய சபைகளில் இதை கவனமாக கைக்கொள்ளவேண்டும். ஆதி திருச்சபைகளில் இது உண்மையாக இருந்தால், இன்றைக்கு நம்முடைய சபைகளில் இதில் எத்தனை காரியங்கள் அதிக உண்மையானதாக இருந்து வருகிறது? அதை குறித்து நாம் ஜாக்கிரதையாக இருக்கணும், நாம் தேவனிடத்தில் வரவேண்டும். இந்த சபைகளில் பெரும்பாலானவற்றை மனந்திரும்பும்படி அழைக்கிறார், அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்களை விட்டு திரும்ப

சொல்லுகிறார், நாம அதை கருத்தில் கொள்ளவேண்டும் சபை மேய்ப்பராக, தலைவராக. தேவனுக்கு முன்பாக சரியான ஜீவியத்தை கொண்டிருக்க கவனம் வேண்டும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. இந்த அண்டசராசரத்தை உண்டாக்கிய தேவன் நம்மை பார்த்து பேசுகிறார் அதாவது, ' உன்னிடத்தில் எனக்கு பிடித்த சில விஷயங்கள் இருக்கிறது, இருந்தாலும் சில தவறான காரியங்கள் நியாயப்பிரமாணத்தை கொண்டு வருவதாக இருக்கிறது என்கிறார், சரியா?

சரி, அடுத்த வாரம் நாம தொடர்ந்து இந்த சபைகளைதான் பார்க்க இருக்கிறோம், அதற்கு பிறகு இயேசு யோவானிடம் எதிர்காலத்தில் என்ன சம்பவிக்க போகிறது என்று சொல்லுகிறார் என்பதை பார்க்கலாம், சரியா? தவறாமல் நிகழ்ச்சியை பாருங்கள். அடுத்த வாரம் சந்திப்போம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.